பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
07 10 2026 06 45
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பிரதமர் திரு. நரேந்திர மோடி, பொதுவாழ்வில் 25 ஆண்டுகளை நிறைவு செய்திருப்பதையொட்டி, பி.ஜே.பி. சார்பில் இன்று பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

- இந்திய விமானப்படையின் புதிய தளபதியாக ஏர் மார்ஷல் Ashutosh Dixit நியமிக்கப்பட்டுள்ளார்.

- தாராபுரம், மதுராந்தகம் தொகுதிகளில் பதிவான வாக்குகள் அடங்கிய மின்னணு இயந்திரங்கள், வாக்கு எண்ணும் மையங்களில் பலத்த பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளன.

- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தில் நான்காம் நிலை பணியிடங்களுக்கான தேர்வு அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

- வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு எதிரான முதலாவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<><><><><><><>

பிரதமர் திரு. நரேந்திர மோடி, பொதுவாழ்வில் 25 ஆண்டுகளை நிறைவு செய்திருப்பதையொட்டி, பி.ஜே.பி. சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிரதமர் திரு. நரேந்திர மோடியும், பி.ஜே.பி. தலைவர் திரு. நிதின் நபினும், வளர்ச்சியடைந்த பாரதத்திற்கான உறுதிமொழி நிகழ்ச்சியில் இன்று உரையாற்ற உள்ளனர்.

பிரதமர் ஆற்றும் இந்த உரையில் நாட்டின் பல்வேறு மாநிலங்களில் இருந்தும் பி.ஜே.பி. மூத்த தலைவர்கள் காணொலி வாயிலாக பங்கேற்கிறார்கள்.

பிரதமரின் 25 ஆண்டுகால பொதுச்சேவையை பாராட்டி, நாடு முழுவதும் சேவை ஜோதி யாத்திரை நடைபெறுகிறது.

நீலகிரி மாவட்டம் ஊட்டியில் நடைபெற உள்ள யாத்திரையில் தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர். எல். முருகன் பங்கேற்க இருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<><><><><><><>

குறு-சிறு மற்றும் நடுத்தர தொழில் நிதியத்தை ஏற்படுத்த மத்திய அமைச்சரவை எடுத்துள்ள முடிவு இந்த துறைக்கு பெரும் ஊக்கத்தை அளிக்கும் என்று பிரதமர் திரு. நரேத்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

மத்திய அமைச்சரவை முடிவு குறித்து சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், இந்திய வர்த்தகத்துறையில் அடுத்த தலைமுறையினரை உருவாக்குவதற்கான முக்கிய நடவடிக்கையாக இது அமைந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்

சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் தங்களின் செயல்பாடுகளை விரிவுபடுத்தவும், மேம்பட்ட தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்ளவும், உற்பத்திதிறனை அதிகரித்து உலகளவிலான சந்தையில் போட்டியிடவும் அமைச்சரவையின் முடிவு வாய்ப்புகளை அளிப்பதாக பிரதமர் அதில் தெரிவித்துள்ளார்.

ஒருங்கிணைந்த போக்குவரத்து மற்றும் தளவாட ஆணையம் அமைப்பதற்கான அமைச்சரவையின் முடிவு நாட்டின் போக்குவரத்து மற்றும் தரவு சார்ந்த திட்டமிடல் ஒருங்கிணைப்பை உறுதி செய்வதாக அமைந்துள்ளது என்றும் குறிப்பிட்டுள்ள பிரதமர், நாட்டின் வளர்ச்சிப் பாதையில் மிகப்பெரிய ஊக்கத்தை இது ஏற்படுத்தும் என கூறியுள்ளார்.

இதேபோல் மத்திய இணையமைச்சர் டாக்டர். எல். முருகன் வெளியிட்டுள்ள சமூகவலைதள பதிவில் சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் வளர்ச்சி நிதியத்திற்கு 10 ஆயிரம் கோடி ரூபாய் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்திருப்பது இந்த துறையின் மிகப்பெரிய வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு உற்பத்தி மற்றும் அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் குறிப்பிடத்தக்க முயற்சியாக இது அமைந்துள்ளது என்றும் டாக்டர். எல். முருகன் குறிப்பிட்டுள்ளார்.

<><><><><><><>

இந்திய விமானப்படையின் புதிய தளபதியாக ஏர் மார்ஷல் Ashutosh Dixit நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போதைய விமானப்படை தளபதி ஏர் சீஃப் மார்ஷல் *Amar Preet Singh* வரும் *31* ஆம் தேதியுடன் ஓய்வு பெறுவதையொட்டி, புதிய தளபதியாக *Ashutosh Dixit* நியமிக்கப்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

விமானப்படையில் பல்வேறு பொறுப்புகளை இவர் வகித்து உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

<><><><><><><>

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தில் நான்காம் நிலை பணியிடங்களுக்கான தேர்வு அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் *10* ஆம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசு துறைகளில் இளநிலை உதவியாளர், தட்டச்சர், கிராம நிர்வாக அதிகாரி உள்ளிட்ட பணியிடங்களுக்கான குரூப் நான்கு தேர்வு குறித்த அட்டவணையை *TNPSC* வெளியிட்டுள்ளது.

குரூப் நான்கின் கீழ் மாநிலம் முழுவதும் *6* ஆயிரத்து *574* காலிப்பணியிடங்கள் உள்ளதாகவும், இந்த தேர்வுக்கு அடுத்த மாதம் *5* ஆம் தேதிவரை தேர்வர்கள் இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம் என்றும் *TNPSC* வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<><><><><><><>

தாராபுரம், மதுராந்தகம் மற்றும் புதுச்சேரி தட்டாஞ்சாவடி தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு முடிவடைந்த நிலையில், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் அந்தந்த தொகுதிகளின் வாக்கு எண்ணும் மையங்களில் பலத்த பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளன.

தாராபுரத்தில் *80* புள்ளி மூன்று ஒன்று சதவீத வாக்குகளும், மதுராந்தகத்தில் *86* புள்ளி இரண்டு ஆறு சதவீத வாக்குகளும் பதிவாகியுள்ளன.

இந்த இரு தொகுதிகளிலும் பதிவான வாக்குகள், வாக்கு எண்ணும் மையங்களில் பலத்த பாதுகாப்புடன் வைக்கப்பட்டிருப்பதாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த இரு தொகுதிகளிலும், புதுச்சேரி தட்டாஞ்சாவடி தொகுதியில் நேற்று நடைபெற்ற இடைத்தேர்தலில் பதிவான வாக்குகளும் நாளை மறுநாள் எண்ணப்படுகின்றன.

<><><><><><><>

*ஃப்ளை துபாய் விமானப் பயணிகளை பத்திரமாக மீட்டதற்காக இந்திய வம்சாவளி விமானி ஸ்மித் மச்சாரை பாராட்டும் தீர்மானம் அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் கொண்டுவரப்பட்டது.*

<><><><><><><>

*கஜகஸ்தானின் Oskemen-ல் இந்தியா – கஜகஸ்தான் கூட்டு ராணுவப் பயிற்சி நடைபெற்றது.*

<><><><><><><>

*அறிவியல் ஆராய்ச்சி கல்விசார் நடவடிக்கைகள் உள்ளிட்ட துறைகளில் இரு தரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்காக இந்தியாவும் – கானாவும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை பரிமாறிக் கொண்டுள்ளன.*

<><><><><><><>

*ஜம்மு-காஷ்மீரின் Kalakot, Rajouri பகுதிகளில் பாதுகாப்புப் படையினரின் தயார்நிலை மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து வடக்குப் பிராந்திய ராணுவ கமாண்டர் லெப்டினன்ட் ஜெனரல் பிரதிக் ஷர்மா நேற்று ஆய்வு செய்தார்.*

<><><><><><><>

*சென்னை வில்லிவாக்கம் பகுதியில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் மற்றும் வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா ஆய்வு செய்தார்.*

<><><><><><><>

*பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள மத்திய கூட்டுறவு வங்கிக் கிளைகள் மற்றும் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களில் சிறப்பு கடன் முகாம் நாளை மறுநாள் நடைபெற உள்ளது.*

<><><><><><><>

*ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் ராமநாத சுவாமி கோவிலில் உண்டியல் வருவாய் ஒரு கோடியே 70 லட்சம் ரூபாய் கிடைத்துள்ளதாக கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.*

<><><><><><><>

*திருவள்ளூர் மாவட்டம் பிரியாங்குப்பம் ஊராட்சியில் நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்டப் பணிகளை ஆட்சியர் திருமதி. கவிதா நேற்று ஆய்வு செய்தார்.*

<><><><><><><>

*வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு எதிரான முதலாவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.*

*லக்னோவில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் டாஸ் வென்ற இந்தியா பந்துவீச்சை தேர்வு செய்தது.*

இதையடுத்து முதலில் விளையாடிய வெஸ்ட் இண்டீஸ் அணி 19 புள்ளி ஒரு ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 171 ரன் எடுத்தது.

172 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இந்திய அணி 14 புள்ளி ஒரு ஓவரில் 2 விக்கெட்டுகளை மட்டுமே இழந்து இலக்கை எட்டியது.

தொடக்கக் ஆட்டக்காரர்கள் சஞ்சுவ் சாம்சன் 11 ரன்னுக்கும், அபிஷேக் ஷர்மா 21 ரன்னுக்கும் ஆட்டமிழந்தனர். எனினும், ஸ்ரேயாஸ் ஐயர் 43 பந்துகளில் 102 ரன்னும், இஷான் கிஷன்
27 பந்துகளில் 37 ரன்னும் சேர்த்து ஆட்டமிழக்காமல் அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றனர்.

இதனிடையே வெஸ்ட் இண்டீஸ் தொடருக்கு பின்னர் நியூசிலாந்து அணியுடனான டுவெண்டி – டுவெண்டி தொடரில் பங்கேற்கும் இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரேயாஸ் ஐயர் தலைமையிலான அணியில் வேகப்பந்து வீச்சாளர் புவனேஷ் குமார் நான்கு ஆண்டுகளுக்கு பின்னர் அணியில் இடம்பெற்றுள்ளார்.

<><><><><><><>